வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே, அதை 'ஒழுக்கல்' என்று சொல்ல முடியாது. கொள்கையளவிலே இன்ன திசையில் போகிறோம் என்பதைக் காட்டுகின்ற முறையிலே ஏழை வணிகர்களுக்கு, ஏழை மக்களுக்கு, ஏழை விவசாயிகளுக்கு உதவி செய்கின்ற திசையில் சென்று கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவிக்கின்ற முறையிலேதான் கூறியிருக்கிறார்களே தவிர, குறிப்பாக 15,000 என்ற எண்ணை அவர்கள் குறிப்பிடாத காரணத்தாலே, பட்ஜெட் இரகசியத்தை வெளியிட்டார் என்று சொல்லக் கூடிய முறையில் இதிலே மோஷனைகவும், அட்ஜோர்ன்மெண்ட் மோஷனைகவும் கொண்டுவருவதற்கு வழியில்லை. அதோடு மட்டுமல்ல, எனக்கிருக்கின்ற சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கும் இதிலே இடம் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. விநாயகம்: ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் ஒன்றுமில்லை, ஃபார் எலிசிடிங் இன்பர்மேஷன் என்றால் அதற்காகக் கேள்வியாகப் போட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்பு பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் முன்னாள் பேரவைத் தலைவர் திரு. யூ. கிருஷ்ண ராவ் அவர்களிடம் கேட்டுத் தெரிந்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இதிலே பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் ஒன்றுமில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். நான் இந்தப் பேரவையின் தலைவராக பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டபொழுது குறிப்பிட்டது இந்தப் பேரவையின் 249 விதிகளின்படி சபையின் நடவடிக்கைகள் நடத்தப்பட வேண்டும், அதற்கும் மேல் இங்கிலாந்து பார்லிமெண்ட் நடைமுறைக்குத் தகுந்தவாறு தான் நடவடிக்கைகள் நடத்தப்பட வேண்டும் என்று.

திரு. கே. விநாயகம்: ஆன் எ பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அதை அவர்களுடைய பேச்சின்போது சொல்லிக்கொள்ளலாம்.

அடுத்ததாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கு. சுப்பையா அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப் பேரவையின் விலை மதிக்கமுடியாத நேரத்தை நான் வீணாக்க விரும்பாமல் இதைக்குறித்து தீர்ப்பை மட்டும் சொல்லிவிடலாம் என நினைக்கிறேன்.

3. உரிமைப் பிரச்சினைகள் (தொடர்ச்சி).

(இ) சட்டமன்ற அவைகளின் சுற்றுப்புறங்களில் ஊர்வலங்கள் நடத்தத் தடை உத்தரவு.

திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு மன்றத் தலைவர் அவர்களே, சட்ட மன்றத்தைச் சுற்றியுள்ள சாலைகளில் ஊர்வலங்கள் முதலியவற்றைத் தடை செய்து சென்னை போலீஸ் கமிஷனர்

பிறப்பித்துள்ள தடை உத்தரவு இந்த மன்றத்தின் கௌரவத்தைப் பொது மக்கள் முன்னிலையில் தாழ்த்துவதாக உள்ளது. சட்ட மன்றத்தின் சார்பில் சபாநாயகரிடமிருந்து கோரிக்கை எழுந்தால் ஒழிய, போலீஸ் தலையிடுவது, சபையின் அதிகாரத்தில், குறிப்பாக சபாநாயகர் உரிமையில், போலீஸ் அதிகாரிகள் தலையிடுவதாகும். சபாநாயகரின் அனுமதியின்றி போலீசார் தடை உத்தரவு பிறப்பித்திருப்பதால் இந்த மன்றக் கூட்டத் தொடரில் பொது மக்கள் மன்றத்திற்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபடக்கூடுமென்று போலீசார் கருதுவதாகத் தவறான எண்ணம் பொது மக்களிடையே பரவும்.

பொது மக்கள் இந்த மன்றத்தைப் பெரிதும் மதிக்கிறார்கள். மன்றத்தின் நடவடிக்கைகளுக்குக் கௌரவம் அளிக்கிறார்கள். அவ்வாறிருக்க, இந்த மன்றத்திற்கும் பொது மக்களுக்குமிடையே உள்ள நல்லுறவைப் போலீஸார் கெடுப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். எனவே, இந்தப் பிரச்சினையை உரிமைக் கமிட்டி பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட மன்றத்தைச் சுற்றியுள்ள சாலைகளில் கூட்டங்கள் சேரக்கூடாது என்பது பற்றிப் போலீஸ் கமிஷனர் 41-வது விதிப்படி போட்ட உத்தரவைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அந்த உத்தரவை எடுத்துப் பார்க்கின்றபோது கமிஷனர் அவர்கள் எதற்காக அந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது. இதற்குக் காரணம் கமிஷனர் என்ற போலீஸ் அதிகாரி அல்ல. மேலவையிலே ஒரு முறை ஒரு உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டது. உறுப்பினர் ஒருவர் மேலவைக்குப் போய்க் கொண்டிருந்தபோது யாரோ அவரைத் தடை செய்ததன் காரணமாக உரிமைப் பிரச்சினையாக எடுத்து உரிமைக் குழுவுக்குக் கொண்டு வந்து 'During the days of the sittings of either House of the Legislature' இந்த 41-வது விதிப்படி மக்கள் கூடுவதைத் தடுக்க வேண்டுமென்று மேலவையில் உரிமைக் குழு தீர்மானித்தது. மேலவையில் நிறைவேற்றிய அந்தத் தீர்மானத்தின்படி போலீஸ் கமிஷனர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்படிப் பார்க்கின்றபோது போலீஸ் கமிஷனர் பிறப்பித்த உத்தரவு இந்த அவையின் உரிமையைப் பாதிக்கிறது என்று இதிலே நாம் ஏதாவது செய்தால், மேலவையின் கண்ணியம், உரிமை பாதிக்கப்படும் என்று கமிஷனர் மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வர முடியும். ஆகவே, மேலவை உரிமைக் குழுவின் தீர்ப்பின்படிதான் கமிஷனர் இந்த உத்தரவைப் பிறப்பித் திருக்கிறார். அதிலும் சட்ட மன்றக் கட்டடத்திற்கு வெளியே உள்ள சாலைகளிலேதான் கமிஷனருடைய அதிகார ஆட்சி வரம்பு இருக்கிறது. 'ப்ரிசிங்ட்ஸ் ஆஃப் தி ஹவுஸ்' என்று சொல்லும் போது அது இந்தக் கட்டடத்தைப் பொறுத்தவரை தான்சொல்ல முடியும். கமிஷனருடைய அதிகாரம் இந்தக் கட்டடத்திற்கு அப்பாற்பட்டு உள்ள சாலைகளில்தான். அது போலவைத்

தலைவருடைய அதிகார வரம்பில் குறுக்கிடாது. அவ்வாறு பேரவைத் தலைவருடைய அதிகாரத்தில் குறுக்கிடாதபடிதான் இந்த உத்தரவை இட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பேரவையின் உரிமை எதுவும் எழவில்லை என்று தீர்ப்புக் கூறுகிறேன்.

வேறு இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. இன்றைக்கு நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தால் நாளை மறுநாள் இவற்றை எடுத்துக் கொள்ளலாம்.

•

5. அறிவிப்பு.

'மீலாடி நபி' யை முன்னிட்டு அவைக்கு விடுமுறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 21—6—1967ம் நாள் மீலாடி நபி பண்டிகையை முன்னிட்டு அரசு பொதுவிடுமுறையாக அறிவித்திருக்கிறபடியால், அன்று பேரவைக் கூட்டம் நடைபெறாது. ஆகவே, வரவு செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம் 27—6—1967-ம் தேதி தொடர்ந்து நடைபெறும்.

6. 1967-68-ம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொதுவிவாதம் (தொடர்ச்சி).

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திலே ஒருசில கருத்துக்களை இந்த மன்றத்தின் ஆழ்ந்த கவனத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதல் முதலிலே இன்று இருக்கிற விலைவாசிப் பிரச்சினையைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூறுவது எனது கடமையாகக் கருதி அதைப் பற்றிக் கூறுவதற்கு முற்படுகிறேன். விலைவாசி இன்று அபரிமிதமாக உயர்ந்திருக்கிறது என்பதை இந்தியப் புள்ளி விவரங்களைச் சுட்டிக்காட்டி 24 புள்ளிக்கு மேலாக உணவுப் பண்டங்களின் விலை உயர்ந்திருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள்—அவர்களுடைய பட்ஜெட் உரையிலே. ஆனால், உணவு அமைச்சர் உயர்திரு மதியழகன் அவர்கள், விலைவாசியெல்லாம் இறங்குமுகமாக இருக்கின்றன என்பதற்கு மேற்கோளாக ஒருசில புள்ளி விவரங்களை, கோயம்புத்தூர் நகரத்தைப் பொருத்த புள்ளி விவரங்களை, இந்தச் சபையின் முன்னால் வைத்தார்கள். அதிலே கூறப்பட்டிருக்கிற பண்டங்கள் எல்லாம், கூறியிருக்கிற விலைகள் எல்லாம் முன்பு அவர்கள் எதிர்க்கட்சித் தரப்பில் இருந்த போது அகில இந்திய ரேடியோவில் கூறப்படுகின்ற விலைக்கு ஒப்பாக இருக்கும் என்று மட்டும்தான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். உண்மையிலேயே, உணவு தானியங்களின் விலைவாசி வெளி மார்க்கெட்டுக்களில் குறைந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அரசாங்கத் தரப்பிலிருந்து ரூபாய்க்கு ஒரு படி அரிசி கோவை நகரத்திலும், சென்னை மாநகரத்திலும் கொடுத்து வருவது வரவேற்கத்தக்கதுதான். அதைப் பாராட்டுகிறோம். ஆனால், 31 லட்சம் மக்களுக்கு மட்டும் கொடுத்தால் போதாது. இன்னும் வறுமையினால் வாடிக் கொண்டிருக்கின்ற பல கோடிக்